தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1974 சனவரி 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கல்லூரிப் பேராசிரியர்களிடையே ஆராய்ச்சிப்பணி

*181. வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி பேராசியர்களிடையே ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்லூரி பேராசியர்களிடையே ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஆண்டிற்கு இரு பேராசிரியர்களை ஆராய்ச்சி வாயிலாக டாக்டர் பட்டம் பெறுவதற்கு அரசு தம் செலவில் அனுப்புகிறது. மேலும், 15–11–1973-லிருந்து பி.எச்.டி. பட்டம் பெற்ற பேராசிரியர்களுக்கு ஒரு திங்களுக்கு ரூ. 100 தனிச் சம்பளமாக கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, "ஆண்டுக்கு இரண்டு பேராசிரியர்கள்" என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் அரசுக்கும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே' 1972–73ம் ஆண்டு நாம் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை. 1973–74ம் ஆண்டில் ஐந்து பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஆண்டுக்கு நான்கு பேராசிரியர்களையாவது தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: For getting Ph.D. thesis have to be submitted to University and the persons have to work under some Professors. For private persons who want to do research, it is difficult. Therefore will the Hon. Minister see to the removal of such restrictions?

[1974 சனவரி 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதைப் பல்கலைக்கழகம்தான் செய்ய வேண்டும். பல்கலைக்கழகத்தி னிடத்தில் விண்ணப்பித்தால் அவர்கள் ஆராய்ந்து, சிண்டிகேட் மூலமாக முடிவு செய்வார்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி : பி.எச்.டி. பட்டம் பெற்ற பேராசிரியர் களுக்கு 15–11–1973லிருந்து ரூ. 100 அதிக ஊதியம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இது எல்லாக் கல்லூரிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் எத்தனை பேருக்குக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இது எல்லாக் கல்லூரிகளுக்கும் தரப்படுகிறது. ஆனால், அதனுடைய எண்ணிக்கைக் குறிப்புகள் இப்பொழுது இல்லை.

திரு கு. காமாட்சி : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? எப்படி அவர்கள் மதிப் பிடப் படுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்காக விண்ணப்பம் பெறப்பெற்று, பேராசிரியர்களாக இருப்பவர்களில் குறைந்தது 35 ஆண்டு வயதுக்குமேல் போகாமலிருப்பவர்களாகப் பார்த்து, அவர்களில் சிறந்தவர்களை முதல் வகுப்பில் தேறியவர்களை பி.எச்டி. இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு செய்ததன் மூலமாக அவர்கள் உறுதி யாகப் பட்டம் பெறக்கூடும் என்று யார் யாரை அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் சிபார்சு செய்கிறார்களோ அவர்களிடத்திலிருந்து பெறுகிற குறிப்புகளை வைத்துக்கொண்டு அரசு தேர்ந்தெடுக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, தனியார் துறையில் வேலை பார்க்கிறவர்களுக்கு, 100 ரூபாய் தனி ஊதியம் கொடுக்கப்படுவதில்லை. இன்றைய "இந்து" பத்திரிகையில் "லெட்டர்ஸ் டு தி எடிட்டர்" என்னும் தலைப்பிலே கூறியிருக்கிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் கொடுக்கப்படுகிறது. தனியார்த் துறைக் கல்லூரிகளில் கொடுக்கப்படவில்லை என்று புகார் இருக்கிறது, அதற்கு ஒரு அரசாங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அந்த அரசாங்க ஆணையில் அது வரவில்லையென்றால், தனி அரசாங்க ஆணையினைப் பிறப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி விவரக்குறிப்புகள் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கு மானால், தனியாக ஆராய்ந்து தக்க முடிவெடுக்க அரசு முயலும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது கல்லூரிப் பேராசிரியர்கள் ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளுவதற்கு சென்னை யில் அதிக வசதி வாய்ப்பு இருக்கிறது. மாவட்டங்களில் ஏராளமான கல்லூரி கள் இருக்கின்றன. அங்குள்ள பேராசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கு அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வகுத்திருக்கிறதா?

1974 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஆராய்ச்சிப் பணி புரிவதற்கான வசதி வாய்ப்பு சில குறிப்பிட்ட கல்லூரி களில்தான் இருக்க முடியும். சென்னை நகரத்தில் உள்ளவர்கள் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதல்ல. அவர்கள் மாநிலத்தில் இருக்கும் எந்த கல்லூரிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படலாம். அவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு சென்னை மாநிலக் கல்லூரி போன்ற சிலபல இடங்களில்தான் முழு வசதி வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழகம் சில பேரை வேறு வேறு மாநிலங்களுக்கும் வேறு இடங்களுக்கும் அனுப்ப வேண்டியிருக்கும். இன்னும் சில பேரை வெளிநாட்டுக்குக்கூட அனுப்பும் சூழ்நிலை ஏற்படுமானால் அந்த அளவில் அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆனால், தேர்ந்தெடுக்கபடுகிறவர்கள் எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் படிப்புக் காக படிக்கும் மாணவர்கள் திரும்பத் திரும்ப தமிழ் வரலாறு போன்ற வற்றைத்தான் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். விஞ்ஞான உலகத்தில் இருக்கும் நாம் விஞ்ஞானத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். யூனிவர்சிடி அவ்வாறு முக்கியத்துவம் நம்முடைய கல்லூரிகளில் கொடுப்பதில்லை. விஞ்ஞானப் பாடத்தில் அதிக ஆராய்ச்சிப் பணி செய்வதற்குப் புதிய ஆராய்ச்சியை மேற்கொள்ள நம்முடைய அரசு யூனிவர்சிடிகளுக்கு ஏதாவது உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது எந்தெந்த துறைகளில் அதிகமான எண்ணிக்கையில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். எந்த எந்த துறைகளில் டாக்டர் பட்டம் பெறாமல் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டுப்பார்த்து, குறைவான எண்ணிக்கையில் இருக்கும் துறையிலுள்ளவர்களுக்கு அதிக ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, கணித இயலில் ஒருவர், இயல்பியலில் ஒருவர், வேதியலில் ஒருவர், வரலாற்று இயலில் ஒருவர், ஆங்கிலத்தில் ஒருவர், ஆக ஐந்து பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

Post-Graduate study by elementary school teachers

* 182 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that graduate-teachers serving in Elementary and Higher Elementary schools are not allowed to appear for M.A. degree examination; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இத்தகவல் சரியான தல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.